

# ரதசப்தமி

*பாலு சரவண சர்மா*
*பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர் - ஜோதிடர், ஸ்ரீதணிகை பஞ்சாங்க கணிதக்ஞர்*

சூரியன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி பயனிக்கும் உத்திராயண காலத்தில் வழிபடும் பண்டிகையாகும். இது **சூரிய ஜெயந்தி** என்றும் அழைக்கப்படுகிறது.

சாந்திரமான அடிப்படையில் *"மாக சுத்த சப்தமி"* திதியில் சூரியனின் ஏழு வித நிறங்கள், குதிரைகள், ஏழு ரிஷகளின் வடக்கு பகுதியான துருவம் ஆகியவற்றை குறிப்பிட்டு ஏழு எருக்கன் இலைகளை தலை உச்சியில் வைத்து சூரிய உதய காலத்தில் குளித்து சூரிய நமஸ்காரம் செய்து, ஏழுவித உணவு வகைகளை சூரியனுக்கு படையலிட்டு வழிபடுவதால் நற்சந்ததி கிட்டும் என ஸ்ரீபவிஷ்ய புராணம் எடுத்துரைக்கிறது.

இத்தினத்தில் சூரியோதயத்தில் ஏழு எருக்கன் இலைகள், மஞ்சள் அட்சதை, சேர்த்து உச்சந்தலையில் வைத்து நீராடவும். பெண்கள் இலை, மஞ்சள்தூள் மட்டுமே பயன் படுத்தவேண்டும். தாய், தகப்பனார் இல்லாதவர்கள் எள், பச்சரிசி சேர்த்து தலைகுளிக்க வேண்டும். இது ஆயிரம் சமுத்திர குளியலுக்கு ஈடானது

நிராயண முறையில் தைமாத பிறப்பை மகர சங்கராந்தியாக கடைபிடித்தாலும் உண்மையான அறிவியல் பூர்வமான சமநாள் துவக்கப்புள்ளி அடிப்படையில் (Tropical - Equinox to Equinox )சூரிய வடபயன Winter solstice (உத்திராயண) துவக்கம் வருடம்தோறும் டிசம்பர் 21 அல்லது 22 தேதிகளில் துவங்குகிறது. அன்று தான் உண்மையான மகர சங்கராந்தி, உத்திராயணம், தை மாத பிறப்பாகும்!

ரிக்வேதத்தில் (10:85) 1 முதல் 47 வரை சூரியனை வர்ணிக்கும் செய்யுளில் குறிப்பிடும் ரத சப்தமி பண்டிகைகூட தற்பொழுது வேறுபட்டு உள்ளது இதை தவிர நாம்

கடைபிடிக்கும் மற்ற பண்டிகைகள் அதற்குரிய பருவகாலத்தை ஒட்டி இல்லை. இவை சுமார் 21 நாட்கள் பின்தங்கி வேறுபாடுடன் உள்ளது. இதற்கு காரணம் நிராயண முறைதான்!

துவக்கப்புள்ளியாக கருதப்படும் நட்சத்திரங்களும் இன்று மெல்ல அதன் நிலையில் இருந்து நகர்ந்துள்ளது (பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து வானியல் பொருட்களும் தொடர்ந்து நகரும் (நமது சூரியன் உட்பட!) பூமியில் வருட முடிவு முன்னதாக அமைவதும் பண்டிகை நாட்கள் உண்மையான வானியல் நிலைக்கு தொடர்பு இல்லாமல் உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை!!

சூரிய அயனத்தை ஒட்டிய பண்டிகைகளை இன்றும் பாரததேசத்தில் சாயன முறையில் சில இடங்களில் கொண்டாடுகின்றனர்.

தற்பொழுதய பஞ்சாங்க முறையை தொடர்ந்து கடைபிடித்தால் சில ஆயிரம் ஆண்டுகள் கழித்து நல்ல வெயில் காலத்தில் "**தவறாக**" தைப்பொங்கலை கடைபிடிப்போம்..!

www.prohithar.com